## அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம் - 2014

அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 நிறுவகத்தின் தொடர்ந்திருத்தல்**

நிறுவகம் 2011 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெறுவதன் காரணமாக திரண்ட நட்டத்தில் அதிகரிப்பும் தேறிய சொத்துக்களில் குறைவும் கீழ்வரும் விபரங்களின் பிரகாரம் காண்பிக்கப்படுகின்றன. இதன் படி அரசாங்க நிதி அனுசரணையை பெறாது தொடர்ந்து இயங்குதல் கேள்விக்குரியதாக இருந்தது.

| ஆண்டு | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| நட்டம் | (7,480,881) | (4,893,838) | (16,567,327) | (17,488,986) |
| தேறிய சொத்துக்கள் | 145,129,332 | 131,597,734 | 115,225,967 | 100,231,803 |

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கடன் அடிப்படையில் பெறப்பட்ட ரூபா 47,395,575 தொகையான ஆய்வுகூட உபகரணங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கு முன்னைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கட்டிட பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 4,498,267 தொகை பின்னோக்கிய ரீதியில் சீராக்குவதற்குப் பதிலாக நடைமுறை வேலையாக நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த மூலதன மானியம் ரூபா 70,401,000 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன் அந்த ஆண்டின் இறுதியில் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படி ஊழியர் கடன் மீதி ரூபா 539,540 ஆக இருந்ததுடன் கடன்பட்டோர் பட்டோலையின் படி அது ரூபா 482,917 ஆனமையால் ரூபா 56,623 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் விரிவுரை மண்டபக் கட்டண வருமானம் ரூபா 442,850 தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய பயன்பாட்டுப் பதிவேடுகளின் படி அது ரூபா 548,450 ஆனமையால் ரூபா 105,600 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நீண்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 417,036 கூட்டுத்தொகையான 06 வரவு மீதிகள் மற்றும் ரூபா 8,414,980 கூட்டுத்தொகையான 10 செலவு மீதிகள் என்பவற்றை தீர்ப்பதற்கோ அல்லது முடிவுறுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மஹ இறுப்பள்ளம விவசாயப் பயிர் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனத்திற்கும் தேசிய உணவு மேம்படுத்தல் சபைக்கும் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட 175 பிளாஸ்டிக் உறைகளுக்காக அறவிடவேண்டிய ரூபா 93,500 பெறுமதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

2008 ஏப்ரல் 04 ஆந் திகதிய 138 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட செயற்திட்டத்திற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரை மற்றும் அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக ஆய்வுகூட நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்திற்காக ரூபா 63,932,281 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**2.5 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முறையான அங்கீகாரமின்றி அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகத்தின் புலனாய்வு மற்றும் கணக்காணிப்பு நடவடிக்கைகளுக்காக விவசாய அமைச்சரின் இணைப்புச் செயலாளருக்கு மீளாய்வாண்டின் போது எரிபொருள் செலவினமாக 10 சந்தர்ப்பங்களின் போது ரூபா 121,000 கூட்டுத்தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரினால் வெளிப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அறிக்கை எதுவும் நிறுவகத்தின் முகாமையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பணிப்பாளர் சபையினால் மேற்கூறப்பட்ட நியமனம் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் அவ்வாறான பதவியொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தின் நோக்கங்களுக்கு முரணாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி பல்வேறு நலன்புரி நடவடிக்கைகளுக்காக ரூபா 193,150 கூட்டுத்தொகையான செலவினங்கள் செய்யப்பட்டிருந்தன.

(இ) திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் வெள்ளத்தினால் ஏற்பட்ட இருப்பு நட்டங்களுக்காக ரூபா 1,007,908 கூட்டுத்தொகையான இருப்பு சேதங்களாக பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2014 நவம்பர் 21 ஆந் திகதிய 5/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்திக்கு முரணாக திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாது 2014 ஆம் ஆண்டின் உபகாரப் படியாக ரூபா 260,010 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் நிறுவகத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து ரூபா 17,488,986 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 16,567,327 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 921,659 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் பற்றாக்குறை அதிகரிப்பது தொடர்பில் நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ஏற்பாடு ரூபா 207,330 இனால் அதிகரித்தமை மற்றும் வெள்ளத்தினால் ஏற்பட்ட இழப்புக்களுக்காக ரூபா 1,007,908 தொகை பதிவழித்தல் பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 முதலீட்டு முகாமைத்துவம்

2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலத்தில் முதலீடாகக் காணப்பட்ட ரூபா 12,748,000 தொகையான நிலையான வைப்புப் பணம் மீளப்பெறப்பட்டு மூலதனச் சொத்து வழங்கல் மேற்கொள்ளப்பட்டமையின் அடிப்படையில் நிறுவகத்தின் முதலீடு குறைவடைந்து முதலீட்டு வருமான இழப்பும் ஏற்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மரக்கறி மற்றும் பழங்களைப் போக்குவரத்துச் செய்யும் போது ஏற்படுகின்ற அறுவடைக்குப் பின்னரான பாதிப்பைக் குறைப்பதற்காக பிளாஸ்டிக் உறைகளின் பயன்பாட்டை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 08 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3,475,042 பெறுமதியான 7,937 உறைகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது எஞ்சியிருந்தது.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நலனாளிகளுக்காக 50 சதவீத நலன் பங்களிப்பின் அடிப்படையில் உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட ரூபா 350,000 பெறுமதியான நடமாடும் 04 வியாபாரக் கூடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்களை தகுதியான நலனாளிகளைத் தெரிவுசெய்து பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் மேலதிக உணவுப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரிசி உள்ளடங்கலாக மேலதிக உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்தியை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தில் ரூபா 4,200,000 பெறுமதியான 20 ரயிஸ்கிறீம் இயந்திரங்கள் பெறப்பட்டிருந்ததுடன் தகுதியான நலனாளிகளை இனங்காணாமையின் காரணமாக அவ் இயந்திரங்கள் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாது நிறுவகத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

(ஈ) நிறுவகத்தினால் ஆராய்ச்சி செயற்திட்டங்களை இனங்காணல் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களை தயாரித்தல் மற்றும் நிறுவகத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய வகையில் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவியணியினர், பன்முகப்படுத்தப்பட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பதவியணியினர் மற்றும் உரிய நலனாளிக் குழுவினர் போன்ற சகல பிரிவுகளினதும் ஒன்றிணைவுடன், பிரதேசங்களுக்கு பொருந்தும் வசதியுடன் அமுல்படுத்த முடியுமான தற்போதைய சந்தை மற்றும் விவசாய மற்றும் பின் அறுவடை துறையின் தேவைக்கு ஏற்ப ஆராய்ச்சி செயற்திட்டம் அமுல்படுத்தப்பட வேண்டிய போதிலும் நிறுவகம் அமுல்படுத்திய செயற்திட்டங்களின் வினைத்திறன் ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(உ) அறுவடைக்குப் பிந்திய தொழில்நுட்ப நிறுவகம் ஆரம்பம் முதல் பல்வேறு ஆராய்ச்சி செயற்திட்டங்களின் கீழ் பாரியளவான கிரயமொன்றைச் செய்து வடிவமைக்கப்பட்ட 31 இயந்திரங்கள் பொறிகளில் அனேகமானவை கண்காட்சி நிலையில் மாத்திரம் காணப்படுவதுடன் அந்த இயந்திரங்கள் பொறிகள் மற்றும் தொழில்நுட்பங்களை சந்தைக்கு அறிமுகப்படுத்தி மேம்படுத்துவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் போது 03 செயற்திட்ட உத்தியோகத்தர்களுக்காக ரூபா 1,742,236 தொகையான சம்பளமும், 09 பிரதேச நிலையங்களில் சேவையாற்றுகின்ற வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவியணியினர்களுக்காக ரூபா 2,129,626 தொகையான சம்பளமும் ஆக விரிவாக்கல் சேவைக்காக ரூபா 3,871,862 தொகையான செலவினமொன்று செய்யப்பட்டிருந்த போதிலும் நிறுவகத்தின் ஆராய்ச்சி விளைவுகளை விரிவாக்குவதற்குரிய நடவடிக்கைகளுக்காக முன்னுரிமை வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) நிறுவகத்தில் அமுல்படுத்தப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி 06 துறைகளின் கீழ் அபிவிருத்தி செயற்திட்டம் அமுல்படுத்தப்படுவதுடன் அந்த செயற்திட்டங்களின் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 738,054 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் ஆராய்ச்சி செயற்திட்டங்களில் அரிசி, அரிசியை அண்மித்த உற்பத்திகளை தவிர ஏனைய செயற்திட்டங்களுக்குரிய போதியளவான தரவு முறைமையொன்று நிறுவகத்தினால் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 நிதியத்தின் குறைப்பயன்பாடு

மரக்கறி மற்றும் பழங்களின் போக்குவரத்தின் போது ஏற்படுகின்ற இழப்பினை இழிவுபடுத்துவதற்காக பிளாஸ்டிக் உறைகளின் பாவனையை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிளாஸ்டிக் உறைகளின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 9,251,446 தொகை மற்றும் நெல் அவிக்கும் பரல்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட ரூபா 4,207,384 தொகையுமாக ரூபா 13,458,830 கூட்டுப்பெறுமதியான தொகையொன்று உரிய நிகழ்ச்சித்திட்டத்தை பிரசித்தப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படாமல் 2015 யூன் 30 ஆந் திகதி வரையிலும் நிலையான வைப்புக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவகத்தில் அமுல்படுத்தப்பட்ட நூடில்ஸ் உற்பத்தித் தொழிற்சாலையில் நூடில்ஸ் உற்பத்தி இயந்திரம், கைதவிர்ப்புக்குரியதாக நியமிக்கப்பட்ட குழுவினால் 2013 யூலை 08 ஆந் திகதி வழங்கப்பட்ட சிபாரிசின் படி நூடில்ஸ் இயந்திரக் கூடத்தில் காணப்பட்ட மிகையான பராமரிப்புச் செலவினமொன்றை செய்வதற்கு ஏற்பட்ட 02 பொய்லர்கள், உலர்த்தியொன்றையும் மின்பிறப்பாக்கியொன்றையும் பொருத்தமான பிரகாரம் கைதவிர்க்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் அந்தக் குழு பரிந்துரை

வழங்கி 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2015 யூலை 30 ஆந் திகதி வரையிலும் உரிய குழுவின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற ரூபா 931,453 பெறுமதியான 06 வாகனங்கள் 04 வருடங்கள் முதல் 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களை கைதவிர்ப்பதற்காக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்திற்குச் சொந்தமான ஓடக்கூடிய நிலையில் காணப்படுகின்ற 08 குழாம் வாகனங்கள் காணப்படும் போது குறுகிய தூர ஓட்டத்திற்காக மீளாய்வாண்டின் போது வாடகை வாகனங்களை ஈடுபடுத்தியமைக்காக ரூபா 44,530 தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 4.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு

நிறுவகத்தின் பரிசோதனைக் கூடத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 61,686,875 தொகையான உபகரணங்களின் கொள்வனவு தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.4.2 (ஆ) வழிகாட்டியின் படி ஒவ்வொரு உபகரணங்களுக்காகவும் கூறுவிலை சமர்ப்பித்த கேள்விதாரர்களின் கேள்வி மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட வேண்டிய போதிலும் உபகரணங்கள் மற்றும் 14 சேவை வகைகளின் கீழ் கூறு இலக்கம் 1 மற்றும் கூறு இலக்கம் 2 என 2 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு கொள்வனவு செய்யும் போது ஒவ்வொரு கூறின் கீழும் உள்ள சகல உபகரணங்களைக்காகவும் கூறுவிலை சமர்ப்பிக்காத கேள்விதாரர்கள் நியாயமான காரணங்கள் காண்பிக்காது வெளியேற்றப்பட்டிருந்தனர்.

(ஆ) 10 இயந்திர உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி மதிப்பீட்டின் போது கேள்வி ஆவணங்களில் காண்பிக்கப்பட்ட 346 தொழில்நுட்ப மாதிரிகள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட வேண்டிய போதிலும் 60 மாதிரிகள் மாத்திரம் மதிப்பிடப்பட்டிருந்தன. மேலும் ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த கேள்விதாரர்கள் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்பட்ட தொழில்நுட்ப மாதிரிகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் போது அவை பிழையாக அகற்றப்பட்டு மற்றைய கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டமையின் காரணமாக அந்த உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது ரூபா 16,607,116 தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட 02 பதவிகளிலில்லாத ரோனியோ இயந்திர செயற்படுத்துனர் மற்றும் தனிப்பட்ட உதவியாளர் என்ற 02 பதவிகளுக்காக அமைய அடிப்படையில் இரண்டு ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவர்களுக்காக சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 364,036 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய PF/PE 21 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் 03 ஆம் பிரிவின் படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள்

கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 02 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கொள்வனவுத் திட்டத்திற்குப் புறம்பாக ரூபா 540,830 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் பாதீடு செய்யப்பட்ட செலவினத்தை உள்ளபடியான செலவினங்களுடன் ஒப்பீடு செய்த போது 42 சதவீதம் முதல் 187 சதவீதம் வரையிலான முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு வினைத்திறனான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் நலிவுகள் நிறுவகத் தலைவரின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டுவரப்பட்டிருந்ததுடன் மேலும் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) வருமான சேகரித்தல்
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) பதவியணியினர் முகாமைத்துவம்
(ஈ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்
(உ) வாகனக் கட்டுப்பாடு